[1981 மார்ச் 21

திரு. க. இராமமூர்த்தி : நகராட்சி மன்றங்களாகவும் அதே சமயத்தில் வட்டத் தலைநகராகவும் உள்ள நகரங்களில் குறைந்த வருவாய்த் தொகுதியினருக்காக வீட்டு வசதித் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா ? அங்கே இருக்கின்ற பொருளாதார நிலைமைகளின் காரணமாக அவர்களுக்கு இந்த வசதிகள் கிடைக்கின்ற அளவிலே வீட்டு வசதி வாரியம் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி குறைந்த வருவாய்த் தொகுதியினருக்காக வீட்டு வசதி செய்து தரும் திட்டம் குறைந்த அளவிலேதான் இருக்கிறது. அரசின் எந்தக் கொள்கையின் அடிப்படையிலே இத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நிதி ஆதாரம், டிமாண்ட், அந்த ஏரியாவில் எத்தனை பேர் முன்வருவார்கள் என்பதையெல்லாம் முன்னதாகப் பரிசீலனை செய்து அந்த அடிப்படையிலே வீடுகள் கட்டப்படுகின்றன.

திரு. ப. மாணிக்கம்: வீட்டு வசதி வாரியம், குறைந்தபட்ச வருமானம் நிர்ணயிப்பதில் இடத்திற்கு இடம் மாறுபடுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாதம் ரூபாய் 351-ல் இருந்து 600 வரை வருமானம் பெறுபவர்கள் 'லோ இன்கம் குரூப்'.

வெள்ளாற்றின் கரை அரிப்பு.

* 142 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம்-சேத்தியாத்தோப்பு சாலையில் ஓத்தூர் அருகே வெள்ளாற்றினால் கரை அரிப்பு ஏற்பட்டு சாலையின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அது குறித்து மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகள் யாவை ?

1981 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) ஆம்.

(இ) வெள்ளாற்றில் அதிக நீர் ஓட்டத்தின் காரணமாக, கரை மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதைத் தடுக்கும் பொருட்டு ரூபாய் மூன்று லட்சம் செலவில் ஓரத்தூர் கிராம எல்லையில், வெள்ளாற்றில் வலது கரையில் இரண்டு வெள்ளத் தடுப்பு தேக்கம் (Groynes) கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பணிகள் 31—3—1981-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இருபது ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஆறு எந்த நிலையில் ஓடிக்கொண்டிருந்ததோ அந்த இடத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்திற்கு மேல் ஆக்கிரமிப்பு நடந்து, 100 ஏக்கர் நஞ்சை நிலத்தை அந்த ஆறு விழுங்கியிருக்கிறது. அதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த ஆற்றின் குறுக்கே "குரோயன்ஸ்" (Groynes) என்று தடுப்புச் சுவர் கட்டினால்தான், அந்த ஆற்றினுடைய வேகத்தைத் தடுத்து ஆற்றின் போக்கை மாற்றி அமைத்து சேதத்தைத் தடுக்க முடியும். ஆகவே "குரோயன்ஸ்" என்ற தடுப்புச் சுவரைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அதைத்தான் என்னுடைய பதிலில் தமிழில் சொன்னேன். "வெள்ளத தடுப்புத் தேக்கம்" என்பதுதான் அந்த "குரோயன்ஸ்" (Groynes) என்பது. அந்த வேலைதான் முடியவிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: வெள்ளத் தடுப்புத் தேக்கம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்ததை நான் வரவேற்கிறேன். அதேபோல கரையோரத்தில் ' 'Rivetment' ' என்ற தடுப்புச் சுவர்களைக் கட்டுவதன் மூலமாக சேதத்தைத் தடுத்து நிறுத்த முடியும். ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களில் சுமார் இரண்டு மாதங்களுக்குப் போக்குவரத்து துண்டிக்கக் கூடிய அளவிற்கு தொடர்ந்து பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை இருப்பதால், கரையோரங்களில் "ரிவெட்மென்ட்" என்ற தடுப்புச் சுவரைக் கட்ட அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இப்போது வெள்ளத் தடுப்புத் தேக்கம் பற்றி மட்டும் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், அதையொட்டி தடுப்புச் சுவர்களை கரையோரப் பகுதிகளில் கட்டி சாலைக்கு ஆபத்து இல்லாமல் தடுக்கிற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதற்கு மேல் நடவடிக்கையைத் துரிதமாக எடுக்கும்படி நிச்சயமாக உத்தரவிடப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: வெள்ளாற்றின் கரையில் மக்கள் மண் எடுக்கின்ற அரிப்புணர்ச்சியில் இந்த அரிப்பு ஏற்பட்டிருக்கிறதா? ஏற்பட்டிருக்கிற அரிப்பு ஆற்றுக்கா அல்லது கரைக்கா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: வெள்ளம் அதிகமாகின்றபோது, நீர் வேகமாகச் சென்று மணலை அரித்துவிடுகிறது. அரிப்பு கரைக்குத்தான். மக்கள் மணலை அரித்துக்கொண்டு செல்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட மன அரிப்பு இல்லாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதை அரசு பார்த்துக்கொள்ளும்.

கேரள மாநிலத்திற்கு சிமெண்ட்.

*** 143 வினா.—திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கேரள மாநிலத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்குப் பதிலாக தமிழ்நாட்டில் இருந்து ஆண்டொன்றுக்கு எவ்வளவு சிமென்ட் அம்மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தமிழகத்திற்கும் கேரளத்திற்கு மிடையே ஒரு உடன்படிக்கை 11—2—1980-ம் தேதியன்று ஏற்பட்டது. தன் மாநில தேவைக்கும், கர்நாடக மாநிலத்திற்கும் வழங்க ஏற்றுக் கொண்டது போக, மீதம் உபரியாகவுள்ள மின்சக்தி முழுவதையும் கேரளம் தமிழகத்திற்கு வழங்கும். கேரளத்திலிருந்து பெறும் மின் சக்தியைக் கொண்டு தமிழகத்திலுள்ள சிமெண்ட் ஆலைகளால் கூடுதலாகத் தயாரிக்கப்படும் சிமெண்ட்டை கேரளமும் தமிழகமும் 70 : 30 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளும். இதன்படி 1980-ம் ஆண்டில் (ஜூலை மாதம் முடிய) 2,35,800 மெட்ரிக் டன் அளவு சிமெண்ட் கேரளாவுக்கு அனுப்பப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கேரளாவும் தமிழகமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இரண்டு லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவுக்கு சிமெண்ட் கேரளாவிற்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்திலே சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதால், 70:30 என்ற சதவிகிதத்தைக் குறைத்து நமக்கு 90 சதவிகிதமும், மீதி 10 சதவிகிதம் கேரளத்திற்கும் கொடுக்க தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?